### மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம்:

# சிவகங்கை மாவட்ட விவசாயிகள் முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றி

நாட்டின் முதுகெலும்பாக திகழ்ந்து வரும் விவசாயப் பெருங்குடி மக்களின் நலன் காத்திடும் வகையில், வேளாண்மை சார்ந்த துறைகளை ஒருங்கிணைத்து, விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில், பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, விவசாயிகளின் உற்றத்தோழனாக தமிழக முதல்வர் திகழ்ந்து வருகிறார். அதன்படி, வேளாண் பெருங்குடி மக்களுக்கென செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் மூலம் சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர்.

மேலும், நடப்பாண்டு 2023 ஜனவரி கடைசி வாரத்திலும், பிப்ரவரி முதல் வாரத்திலும் பெய்த





பருவம் தவறிய கனமழையால் பாதிக்கப்பட்டு, 33 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள நெற்பயிருக்கு உயர்த்தப்பட்ட நிவாரணமாக எக்டேருக்கு ரூ. 25 ஆயிரமும், நெல் அறுவடை தரிசில் விதைக்கப்பட்டு சேதமடைந்த இளம் பயறு வகை பயிர்களுக்கு இழப்பீடாக எக்டேருக்கு ரூ. 3 ஆயிரமும் வழங்கப்படும் என முதல்வர் கடந்த 06.02.2023 அன்று அறிவித்தார்.

அதன்படி, சிவகங்கை மாவட்டம் உட்பட 9 மாவட்டங்களில் வருவாய்த்துறை மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து, பயிர்ச்சேத கணக்கெடுக்கும் பணியினை மேற்கொண்டனர். அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் 2022-2023-ஆம் ஆண்டில் 82,290 எக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை சராசரி மழையளவான 413.4 மி.மீக்கு பதிலாக 305.61 மி.மீ பெறப்பட்டுள்ளது. 2023-ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் மழை பெறப்படவில்லை.

பிப்ரவரி 1-ம் தேதி 18.33 மி.மீ மழையும், 2-ம் தேதி 32.2 மி.மீ மழையும், 3-ம் தேதி 2.16 மி.மீ ஆக மொத்தம் 52.84 மி.மீ 3 நாட்களில் மாவட்டம் முழுவதும் பெறப்பட்டது. இதில் சராசரி மழையளவு பிப்ரவரி மாதம் 13.6 மி.மீ. பெறப்பட்ட மழையளவு 52.84 மி.மீ. இது சராசரியை விட 39.24 மி.மீ அதிகமாகும்.

மேலும், பிப்ரவரி 2-ம் தேதி சிவகங்கையில் 29 மி.மீ, தேவகோட்டை தாலுகாவில் 64.08 மி.மீ, காரைக்குடியில் 49 மி.மீ, மானாமதுரை 16.05 மி.மீ, இளையாங்குடி 24.06 மி.மீ, காளையார்கோவில் 41 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. பருவம் தவறிய மழையினால் சிவகங்கை, காளையார்கோவில், மானாமதுரை, தேவகோட்டை, சாக்கோட்டை, கல்

தேவகோட்டை வட்டாரத்தில் ஒரு கிராமத்தில் 65 விவசாயிகளுக்கு 27.10 எக்டேர் பரப்பிற்கு ரூ.5,42,000 மதிப்பீட்டிலும், கல்லல் வட்டாரத்தில் 2 கிராமங்களில் 14 விவசாயிகளுக்கு 6.48 எக்டேர் பரப்பிற்கு ரூ.1,29,600 மதிப்பீட்டிலும், மானாமதுரை வட்டாரத்தில், 4 கிராமங்களில் 42 விவசாயிகளுக்கு 11.95 எக்டேர் பரப்பிற்கு ரூ.2,39,200 மதிப்பீட்டிலும், சாக்கோட்டை வட்டாரத்தில் 160 விவசாயிகளுக்கு 69.4235 எக்டேர் பரப்பிற்கு ரூ.13,90,070 மதிப்பீட்டிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை கணக்கெடுக்கப்பட்டது.

அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 320 விவசாயிகளுக்கு, 129.7335 எக்டேர் பரப்பிற்கு மொத்தம் ரூ.25,96,470 மதிப்பீட்டில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கென அரசிற்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

அதன்படி, முதல்வரின் உத்தரவின்படி, அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டு, அதனைத்தொடர்ந்து விவசாயிகள் வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

இதன் மூலம் பயன்பெற்ற சாக்கோட்டை வட்டாரம், வ.சூரக்குடி கிராமத்தைச் சார்ந்த விவசாயி ச.வீரபெருமாள் கூறுகையில்,

நான் 3 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்து வரும் சிறு விவசாயி ஆவேன். நான் பாரம்பரிய நெல் மற்றும் மற்ற நெல் ரகங்களை சாகுபடி செய்து வருகிறேன். சிறப்பான முறையில் நான் விவசாயம் செய்து, அதன் மூலம் எனது குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்தி வருகிறேன். தற்போதும் அதே போன்று, நேர்த்தியான முறையில் பாரம்பரிய நெல் சாகுபடி செய்திருந்தேன். அறுவடையாகும் நேரத்தில் எதிர்பாரதாக விதமாக பருவம் தவறிய மழையின் காரணமாக, நிலத்தில் தண்ணீர் தேங்கி நெற்பயிர்கள் பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டது. இதனால் எனது வாழ்வாதாரம் பாதிக்கக்கூடிய சூழ்நிலையில் நான் இருந்தேன். என்னைப் போன்ற பாதிப்பிற்குள்ளான விவசாயிகள் குறித்து முதல்வரின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அவர்களின் உத்தரவின்படி, வேளாண்மைத்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் நேரடியாக கள ஆய்வுகள் மேற்கொண்டு, அரசிற்கு பாதிப்புக்கள் தொடர்பான அறிக்கை சமர்ப்பித்தனர். அதனடிப்படையில் நாங்கள் பாதிக்கப்பட்ட 4-வது நாளிலேயே ஒரு ஏக்கருக்கு ரூ.8,000 வீதம் எனது வங்கிக்கணக்கில் நிவாரணத் தொகை வரவு வைக்கப்பட்டது. என்னைப்போன்ற விவசாயிகளின் நிலையைக் கருத்தில் கொண்டு, விவசாயிகளின் பாதுகாவலனாக திகழ்ந்து வரும் முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றியினை அனைத்து விவசாயப் பெருமக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

தேவகோட்டை வட்டாரம், உருவாட்டி கிராமத்தைச் சார்ந்த விவசாயி ரமேஷ்பாபு கூறுகையில்,

நான் 5.50 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்து வருகிறேன். நான் விவசாயம் செய்வதற்கு தேவையான விதை நெல்கள், நுண்உரங்கள், ஜிப்சம் போன்ற பொருட்கள் வேளாண்மைத்துறையின் மூலம் மானிய விலையில் பெற்று, விவசாயத் தொழிலை மேற்கொண்டு வருகிறேன். அறுவடை நேரத்தில், கடந்த பிப்ரவரி மாதம் பெய்த பருவம் தவறி பெய்த கனமழையினால் எனது நெற்பயிர்கள் பாதிப்பிற்குள்ளாகியது. இப்பாதிப்புக்கள் குறித்து துறை சார்ந்த அலுவலர்கள் நேரடியாக கள ஆய்வுகள் மேற்கொண்டனர். அதன்படி, முதல்வர் கருணை உள்ளத்தோடு, ஹெக்டேருக்கு ரூ.20,000 வழங்குவதற்கான அரசாணை பிறப்பித்து, உடனடியாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின்



வங்கிக்கணக்கில் வரவு வைக்கும்படியும் உத்தரவிட்டார். அதன்படி, என்னைப் போன்ற பாதிப்பிற்குள்ளான விவசாயிகள் அனைவரின் வங்கிக்கணக்கிலும் அந்நிவாரணத் தொகை வரவு வைக்கப்பட்டது.

விவசாயிகளின் நலனிற்காக மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள், இடுபொருட்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்துவது மட்டுமன்றி, நாங்கள் பாதிப்பிற்குள்ளாகும் நேரங்களிலும், எங்களுக்கு உறுதுணையாக இருந்து, விவசாயிகளின் உற்றத்தோழனாக திகழ்ந்து வரும் முதல்வருக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

**தொகுப்பு::**
**இரா.சண்முகசுந்தரம்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**(ம)**
**மு.ராஜசெல்வன்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி),**
**சிவகங்கை மாவட்டம்.**




**தேனி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று நடைபெற்ற வங்கியாளர்களுடனான ஆலோசனை கூட்டத்தில் கலெக்டர் ஷஜீவனா 2023-24ம் ஆண்டிற்கான தேசிய வேளாண் மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் சார்பில் கடன் திட்ட அறிக்கையினை வெளியிட்டார்.**

# கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் நிலுவைத் தொகை பெற விண்ணப்பிக்கலாம்

## உதவி இயக்குனர் தகவல்

**மதுரை, மார்ச் 24-**

இது குறித்து மதுரை கைத்தறி துறை உதவி இயக்குநர் அலுவலக செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

மதுரை மாவட்டத்தில் செயல்பட்டு தற்போது கலைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் நெசவாளர்களுக்கு நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிலுவைத்தொகை உள்ளன. நிலுவைத்தொகையை இந்த செய்தி வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் அலுவலக நேரத்தில் 29, கக்கன் தெரு, செனாய் நகர், மதுரை-20 என்ற முகவரியில் இயங்கி வரும் கைத்தறி துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு நேரில் வந்து உரிய ஆவணங்களுடன் (சங்க நெசவாளர் அட்டை மற்றும் ஆதார் அட்டை, வங்கிக் கணக்கு ஒளிநகல்) கைத்தறி அலுவலர்/கலைத்தல் அலுவலரிடம் கோரிக்கை மனுக்களை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கும் பட்சத்தில் அரசிடம் இருந்து நிலுவைத் தொகையை பெற்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட பயனாளிகளிடம் இருந்து உரிய கோரிக்கைகள் வராத பட்சத்தில் நிலு வையில் உள்ள தொகைகள் அனைத்தும் அரசுக்கு மீள சமர்ப்பிக்கப்படும். கூடுதல் தகவல்களுக்கு மேற்கண்ட முகவரியில் இயங்கி வரும் கைத்தறி துறை உதவி இயக்குநர் அலுவலக தொலைபேசி எண்.0452-2535669-க்கு தொடர்பு கொண்டு தகவலை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சிமாட்ஸ் தமிழ் மன்றத்தின் நாலடியார் உரையாடல்

**சென்னை, மார்ச் 24-**

சிறந்த தமிழ் இலக்கியங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வரும் சிமாட்ஸ் தமிழ் மன்றத்தில் இந்த வாரம் நீதி நூல்களுள் ஒன்றான நாலடியார் இடம்பெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்தோடு வணிகவியல் மாணவி வரவேற்புரை கூறி நிகழ்வு தொடங்கப்பட்டது. முதலில் நீதி நூல்கள் பற்றி அறிமுகம் செய்யப்பட்டது.பதினெட்டு நீதி நூல்கள் பற்றியும் திருக்குறள் பற்றியும் அறிமுகம் செய்யப்பட்டது.

மாணவர்கள் தாங்கள் அறிந்த திருக்குறள் பற்றி நிகழ்வில் பகிர்ந்து கொண்டனர். ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி. நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி. இந்தப் பழமொழியில் நாலு என்பது நாலடியாரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கிறது. நாலடியாரும் திருக்குறள் போலவே அறம் பொருள் இன்பம் பற்றிய அதிகாரங்களில் பல்வேறு நீதிக் கருத்துகள் பற்றி நிகழ்வில் விவாதிக்கப்பட்டது.

பொறியியல் கல்லூரிப் பேராசிரியர் பாஷா. நாலடியார் குறித்த தனது பார்வையைப் முனைவர் ரேவதி அவர்களுடன் சேர்ந்து பதிவு செய்தார்கள். நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவடைந்தது. சிமாட்ஸ் பல்கலைக் கழக வேந்தர் மருத்துவர் ந.மா. வீரையன் ஐயா அவர்களின் அதீத தமிழ் இலக்கிய ஆர்வமும் வழிகாட்டுதலுமே இத்தகைய சிறப்பான உரையாடல்கள் தொடர்ந்து நடைபெறக் காரணமாகும்.

# காஷ்மீரில் 'லியோ' படப்பிடிப்பு நிறைவு



**ஜம்மு, மார்ச் 24-**

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் 'லியோ' படத்தின் காஷ்மீர் ஷெட்யூல் நிறைவடைந்துள்ள நிலையில், படக்குழு சென்னை திரும்ப உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய், த்ரிஷா நடித்து வரும் படம், 'லியோ'. கவுதம் வாசுதேவ் மேனன், அர்ஜுன், மிஷ்கின், பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், சஞ்சய் தத் உட்பட பலர் நடிக்கின்றனர். மனோஜ் பரமஹம்சா ஒளிப்பதிவு செய்கிறார். அனிருத் இசை அமைக்கிறார். செவன் ஸ்கிரீன் நிறுவனம் படத்தைத் தயாரிக்கிறது.

கடந்த ஒரு மாதமாக காஷ்மீரில் 'லியோ' படத்தின் படப்பிடிப்பு நடைபெற்று வந்தது. தீவிரமாக நடைபெற்று வந்த இந்தப் படப்பிடிப்பில் அண்மையில் சஞ்சய் தத் நடிக்கும் காட்சிகள் நிறைவடைந்தன. இதனையடுத்து தற்போது படத்தின் காஷ்மீர் ஷெட்யூல் முழுவதுமாக நிறைவடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. திட்டமிட்ட நாட்களுக்கு முன்பாகவே படப்பிடிப்பு முடிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், காஷ்மீர் படப்பிடிப்பை முடிந்த கையுடன் நேற்று 'லியோ' படக்குழு சென்னை திரும்பியதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், அடுத்தக்கட்ட படப்பிடிப்பு 10 - 15 நாட்கள் சென்னையில் நடக்கும் எனவும், அதைத் தொடர்ந்து படக்குழு ஹைதராபாத் சென்று அங்கு படத்தின் க்ளைமாக்ஸ் காட்சிகள் படமாக்கப்பட உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. ஒட்டுமொத்தமாக மே மாதம் படப்பிடிப்பு நிறைவடையும் என கூறப்படுகிறது.

**மரம் மனிதனின் உரம்**



**தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் ஷஜீவனாவை புதிதாக மாவட்ட வருவாய் அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்ட ஜெயபாரதி சந்தித்து வாழ்த்து பெற்றார்.**

# கோவா, ஆந்திர மின் நிலையங்களுக்கு கேஸ் இன்சுலேட்டட் சுவிட்ச்கியர்களுக்கான ஆர்டரை பெற்ற டோஷிபா நிறுவனம்

**சென்னை, மார்ச் 24-**

டோஷிபா டிரான்ஸ்மிஷன் & டிஸ்ட்ரிப்யூஷன் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனம் இன்று வெளியிட்டுள்ள அறிவிப்பில், 400kV வகையில் 23 யூனிட்கள், மற்றும் 220kV வகையில் 9 யூனிட்கள் என்ற எண்ணிக்கையில் கேஸ் இன்சுலேட்டட் ஸ்விட்ச்கியருக்கான (GIS) ஆர்டரை பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளது; இந்த ஆர்டரானது - கோவாவில் செல்டெமில் உள்ள புதிய 2X500MVA துணை மின் நிலையம், மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் ஆலமூறு மற்றும் கொடமுறுவில் உள்ள 400kV வோல்டேஜ் நிலையிலான புதுப்பிக்கத்தக்க சூர்ய மற்றும் காற்றாலை தொகு (பூலிங்) மின்நிலையங்களின் மின்சார பரிமாற்றம் மற்றும் டிஸ்ட்ரிப்யூஷன் நெட்வொர்க்குகளை நிறுவுவது மற்றும் மேம்படுத்துவதற்காக இந்த GIS ஆர்டர்கள் பெறப்பட்டுள்ளன. ஹைதராபாத் அருகே உள்ள TTDI நிறுவனத்தின் அதிநவீன தொழிற்கூடத்தில் தயாரிக்கப்படும் இந்த GIS யூனிட்களின் விநியோகம், அந்தந்த ஆலைகளுக்கு இதே ஆண்டு மே மாதத்தில் துவங்கும். இவை திறந்த வெளிச் சூழலில் வெளிப்புறத்தில் நிறுவப்படும்.

இத்தருணத்தில் பேசிய, TTDI நிறுவனத்தின், சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குனர், ஹிரோஷி ப்ருட்டா, வெளிப்புறத்தில் வைக்கக்கூடிய இந்த திறந்தவெளி வகை GIS-ஐ கட்டிடத்தின் உள் வைக்க வேண்டிய அவசியமில்லை; இதன் மூலம் கட்டுமானத் தரம் மற்றும் பாதுகாப்பை மேம்படுவதோடு, கட்டிடத்தின் கட்டுமானச் செலவு மற்றும் அதற்கான நேரமும் குறைகிறது; எனவே திட்டத்தின் ஒட்டு மொத்த கட்டுமானச் செலவையும் எங்கள் GIS குறைக்கிறது. ஜப்பானில் இந்த GIS பயன்பாடு பரவலாக உள்ளது, மற்றும் டோஷிபா நிறுவனம் சிறந்த எரிவாயு சீலிங் தொழில்நுட்பங்களில் நிபுணத்துவதைப் பெற்றுள்ளது. இந்த ஆர்டர்களைப் பெறுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்; அதுமட்டுமில்லாமல், நல்லதொரு எதிர்காலத்திற்காக இந்தியாவில் மின்சார பரிமாற்றம் மற்றும் விநியோக நெட்வொர்க்குகளை மேம்படுத்தவும், பசுமை மின்னாற்றலை அறிமுகப்படுத்துவதிலும் தீவிரப் பங்களிக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம் என்று தெரிவித்தார்.

# ஹயர் ஹெவி ட்யூடி கினௌஷி குளிர்சாதனங்கள்

**சென்னை, மார்ச் 24-**

கோடைக்காலம் நடப்பு 2023இல் விரைவாக வருவிருக்கும் காரணத்தால் தட்பவெப்ப நிலையின் விளைவுகள் குறித்த கவலைகள் அதிகமாகி உள்ளன. வெப்பத்தைச் சமாளிக்கத் திறனுள்ள குளிர்சாதனக் கருவியைப் பயன்படுத்துவதே சரியான வழியாகும். கினௌசி குளிர் சாதனங்களில் உள்ள சூப்பர்சானிக் குளிரூட்டும் அம்சங்கள், அறையை வழக்கமான குளிர்சாதனங்களை விடவும் 20 x வேகமாகக் குளிரூட்டுகின்றன. மேலும், இந்த வரிசை குளிர்சாதனங்கள் 600 செல்ஷியஸ் கொளுத்தும் வெயிலிலும் அதிகபட்ச குளிர்ச்சியை வழங்கும்.

இது குறித்து ஹயர் அப்ளையன்சஸ் இந்தியா தலைவர் என் எஸ் சதீஷ் கூறுகையில், இந்திய நுகர்வோர்க்குப் புதுமையான பொருள்களைத் தயாரிக்க வேண்டும் என்ற ஹயர் உறுதிப்பாடு வியாபாரத்தின் மைய நோக்கமாகும். ஊக்கம் நிறைந்த வாழ்க்கைக்காக நுகர்வோர் தேவைகளை நிறைவு செய்யப் பிராண்ட் தொடர்ந்து பரிணாம வளர்ச்சியைப் பெற்று வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டே எங்களது கினௌசி 5 நட்சத்திர ஹெவி ட்யூடி குளிர்சாதன வரிசை, கடுமையான வெயில் கொளுத்தும் தட்பவெப்பத்திலும், அதிகபட்ச குளிர்ச்சிக்கு உத்தரவாதம் அளிக்கிறது. அதே தருணம் இதிலுள்ள டிரிபிள் இன்வெர்ட்டர் ப்ளஸ் தொழில்நுட்பம் மின் சிக்கனம், கூடுதல் வசதி, நம்பகத்தன்மை மற்றும் செயல்பாட்டுக்கு உறுதி அளிக்கிறது என்று கூறினார்.

# கம்பம் அருகே மனைவியை கொன்ற கணவருக்கு வலை

**கம்பம், மார்ச் 24-**

கம்பம் அருகே மனைவியை கொன்று நாடகமாடிய கணவரை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர். மனைவியின் உடல் அழுகிய நிலையில் மீட்கப்பட்டது.

தமிழக கேரள எல்லைப்பகுதியான கம்பம் மெட்டு அருகே காஞ்சியார் பகுதியைச் சேர்ந்தவர் பிஜேஸ் (வயது 32). விவசாயி. இவரது மனைவி அனுமோல் (27). தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து வந்தார். இவர்களுக்கு 5 வயதில் ஒரு மகள் உள்ளார். கடந்த 18-ந் தேதி பள்ளியில் இருந்து வந்தவர் மாயமானதாக அவரது கணவர் போலீசில் புகார் அளித்தார்.

அதன் பிறகு பிஜேசும் மாயமானார். இந்நிலையில் பாம்பனார் பகுதியில் வசித்து வந்த அனுமோலின் தந்தை



ஜான் தனது மகளுக்கு போன் செய்தார். போன் ரிங் ஆகி பின்னர் ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டது. இதனால் சந்தேகமடைந்த ஜான் மற்றும் அவரது மனைவி பிலோமினா ஆகியோர் தங்களது மகளை பார்க்க வீட்டுக்கு வந்தனர். வீட்டின் படுக்கை அறையில் இருந்து துர்நாற்றம் வீசியதால் வெளியே சென்று பார்த்தபோது கட்டிலுக்கு அடியில் போர்வை சுற்றப்பட்ட நிலையில் அனுமோல் உடல் கிடந்தது.

இது குறித்து அவர்கள் போலீசாருக்கு புகார் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த போலீசார் அனுமோலின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இது குறித்து போலீசார் தெரிவிக்கையில், அனுமோல் இறந்து 3 நாட்களுக்கு மேல் ஆகி இருக்கலாம். உடல் அழுகிய நிலையில் இருப்பதால் காயங்கள் கண்டுபிடிக்க முடியவில்லை. கணவன்-மனைவிக்கு இடையே ஏற்பட்ட குடும்ப பிரச்சினை காரணத்தால் தனது மனைவியை கொலை செய்து விட்டு பிஜேஸ் தப்பி ஓடி இருக்கலாம் என தெரிய வந்துள்ளது. அவரது செல்போன் ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டு இருப்பதால் அவரை தேடி வருகிறோம். பிரேத பரிசோதனைக்கு பிறகு முழுமையான முடிவுகள் தெரியவரும். கொலை செய்த தனது மனைவியின் உடலை துண்டு துண்டாக வெட்டி கடத்துவதற்காக அவர் மறைத்து வைத்திருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது என்றனர். தற்போது குழந்தையுடன் மாயமான பிஜேசை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# தங்கம் விலை சவரனுக்கு 560 ரூபாய் அதிகரிப்பு

**சென்னை, மார்ச் 24-**

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (மார்ச் 23) சவரனுக்கு ரூ.560 உயர்ந்து, ரூ.44,320-க்கு விற்பனையானது.

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் தங்கம் விலை நிர்ணயிக்கப்படுகிறது. கடந்த சில நாட்களாக அதிகரித்து வந்த தங்கத்தின் விலை, நேற்று முன்தினம் குறைந்திருந்தது. இந்தநிலையில் சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று கிராமுக்கு ரூ.70 உயர்ந்து ரூ.5,540-க்கு விற்பனையானது. சவரனுக்கு ரூ.560 உயர்ந்து ரூ.44,320-க்கு விற்பனையானது. 24 காரட் சுத்த தங்கத்தின் விலை 8 கிராம் ரூ.48,568 க்கு விற்பனையானது. இதேபோல், ஒரு கிராம் வெள்ளி ரூ.75.40-க்கு விற்பனையானது. ஒரு கிலோ பார் வெள்ளியின் விலை நேற்று ரூ.75,400-ஆக இருந்தது.

**மாண்புமிகு சார்பு நீதிமன்றம்.**
**திருமங்கலம்.**
**E.A.No:1/2023 in E.A.No:7/2022 in E.P.No:3/2021 in O.S.No:200/2019**
ராம்குமார்
அங்கீகரிக்கப்பட்ட இவரது பவர் ஏஜெண்ட் வள்ளி மூலம்
க/பெ.அர்ச்சுணன்
7-578,சதாசிவம் தெரு
7வது வார்டு, என்.ஜ.ஓ.காலனி
நாகமலைபுதுக்கோட்டை
மதுரை மேற்கு தாலுகா, மதுரை.
------ மனுதார்/மனுதார்/ உரிமைகோருபவர்
--------எதிரிடை-----
மணிகண்டன், த/பெ.பூவலிங்கம்
3/278,திலகர்தெரு,
வெல்லிங்டன் ரோடு
நாகமலைபுதுக்கோட்டை
மதுரை மேற்கு தாலுகா, மதுரை.
------- 2ம் எதிர்மனுதார்/எதிர்மனுதார்/ பிரதிவாதி
அறிவிப்பு
கனம் நீதிமன்ற உத்தரவுப்படி இந்த அறிவிப்பு செய்யப்படுகிறது.தங்கள் மனு மீது மேற்படி மனுதாரர் மனு தாக்கல் செய்து தங்களுக்கு பலமுறை நீதிமன்றம் மூலம் சம்மன் செய்தும் தாங்கள் ஆஜராகவில்லை.எனவே இந்த அறிவிப்பு செய்யப்படுகிறது.இதனால் தாங்கள் 18.04.2023-ம் தேதி காலை 10.30மணியளவில் மேற்படி நீதிமன்றத்தில் தாங்கள் நேரில் ஆஜராக வேண்டும் என உத்டதரவிடப்படுகிறது.இல்லையேல் வழக்கு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை தெரியப்படுத்தப்படுகிறது.
K.P.S.இளங்கோவேல்ராஜன் B.B.A.,B.L.,
I.ராஜீவன் B.E.,LL.B.,
அட்வகேட்ஸ், திருமங்கலம்.

**சிவகங்கை CJM கோர்ட்டு**
**I.A No.2/2022**
**MCOP No.9/2018**
ராஜேஸ்வரன்
................ மனுதார்/மனுதார்
எதிர்
திருச்சிராப்பள்ளி,
பொன்மலை
No.67AR கக்கன் காலனியில் வசிக்கும் ரெங்கசாமி மகன் செந்தில்குமார்
......... 1ம் எதிர்மனுதார் / 1ம் எதிர்மனுதார்
அறிவிப்பு
மேற்படி நம்பர் மனுவில் தாங்கள் ஆஜர் ஆவதற்கு 31.03.2023 அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றையதினம் காலை 10.00 மணிக்கு ஷை நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் தங்களுக்க எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
பாரதிராஜா பி.ஏ.பி.எல்
பிரகாஷ் பி.எஸ்ஸி.பி.எல்
அட்வகேட்/சிவகங்கை.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**

## ராகுல்காந்திக்கு சிறை தண்டனை:
# அலங்காநல்லூரில் காங்கிரசார் சாலை மறியல் போராட்டம்



**அலங்காநல்லூர். மார்ச்.24-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் கேட்டுக்கடையில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியினர் சாலை மறியல் ஆர்ப்பாட்டம் செய்தனர் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் எம்பியுமான ராகுல்காந்தி அவர்கள் மோடி என்ற பெயரை பயன்படுத்தி சர்ச்சையாக பேசியதற்காக சூரத் நீதிமன்றம் இரண்டு ஆண்டு சிறை தண்டனை விதித்ததை முன்னிட்டு தண்டனையை உடனே ரத்து செய்யக்கோரி காங்கிரஸ் கட்சியின் வட்டாரத் தலைவர்கள் சுப்பாராயல், காந்தி, தலைமையில் சாலை மறியல் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தொடர்ந்து மத்திய அரசு கண்டித்தும் பாரத பிரதமர் மோடி அவர்களை பதவி விலகச் சொல்லியும் அதானி மற்றும் அம்பானிக்கு இலவசமாக அரசு மற்றும் மக்கள் வரிப்பணத்தை அள்ளி அள்ளி கொடுக்கும் மோடியே பதவி விலகு என்று கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதில் நிர்வாகிகள் ஜெயமணி, ராமமூர்த்தி, மலைக்கனி, திரவியம், பாலமேடு வைரமணி, மலைராஜன், உட்பட பலர் கலந்து கொண்டனர் ஆர்ப்பாட்டம் செய்தவர்களை சமயநல்லூர் டிஎஸ்பி பாலசுந்தரம், மற்றும் அலங்காநல்லூர் இன்ஸ்பெக்டர் சங்கர் கண்ணன், தலைமையிலான போலீசார் மறியல் போராட்டம் செய்தவர்களை கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர்.

## ஜல் ஜீவன் திட்டத்தில்
# ரூ.1,000 வசூல்: கிராம சபை கூட்டத்தில் சலசலப்பு

**அருப்புக்கோட்டை மார்ச் 24.**

ஜல் ஜீவன் திட்டத்தில் இணைப்புக்கு ரூபாய் ஆயிரம் வசூல் செய்து சரிவர குடிநீர் சப்ளை இல்லாததால் கிராம சபை கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

காரியாபட்டி அருகே குரண்டியில் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு கிராமசப கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஊராட்சி துணைத் தலைவர் பேச்சியம்மாள் தலைமை வகித்தார். கூட்டத்தில் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன.

குறிப்பாக மத்திய அரசின் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டது. டெபாசிட்டாக ரூபாய் 1000 பெற்றனர். சிலர் கொடுக்கவில்லை. ஒரு சிலருக்கு ரசீது வழங்கப்பட்டது. சிலருக்கு டெபாசிட் தொகை கொடுத்தும் ரசீது கொடுக்கவில்லை.

இவ்வாறாக 630 இணைப்புகள் கொடுக்கப்பட்டன. வாருகால் வழியாக பைப் லைன் செல்வதாக குற்றச்சாட்டு உள்ளது. பெரும்பாலான குழாய்களில் குடிநீர் சப்ளை கிடையாது. ஒரு ஆண்டாக இப்பிரச்சனை இருந்து வருவதால் ஆத்திரமடைந்த கிராம பொதுமக்கள் கூட்டத்தில் கேள்வி கேட்டனர்.

குடிநீர் சீராக வழங்க வேண்டும். இல்லாவிட்டால் டெபாசிட் தொகையை திரும்ப தர வேண்டும் என வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது



தேனி மாவட்டம் கம்பம் நகராட்சி பகுதியில் கட்டப்பட்டு வரும் வார சந்தை கட்டுமான பணியினை கலெக்டர் ஷஜீவனா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் கம்பம் நகராட்சி ஆணையாளர் பாலமுருகன் உள்ளார்.



மதுரை சுந்தரராஜபுரம் மாநகராட்சி ஆரம்ப பள்ளியில் மேயர் இந்திராணி பொன்வசந்த் நேற்று ஆய்வு மேற்கொண்டார். அருகில் மண்டல தலைவர் பாண்டி செல்வி, கல்வி குழு தலைவர் ரவிசந்திரன் ஆகியோர் உள்ளனர்.

## காலி செய்வதாக வந்த தகவல்:
# விருதுநகரில் நகை கடையை முற்றுகையிட்ட பொதுமக்கள்

**விருதுநகர் மார்ச் 24.**

விருதுநகர் பழைய பஸ் ஸ்டாண்ட் அருகே நகைக்கடையில் உள்ள தளவாடப் பொருட்களை காலி செய்வதாக தகவல் அறிந்த அந் நிறுவனத்தால் பாதிக்கப்பட்டவர்கள் முற்றுகையிட்டனர்.

மதுரை தலையிடமாக கொண்டு ஃப்யூச்சர் ஜெனரேஷன் கேப்பிட்டல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் மாத தவணை செலுத்தினால் அதன் அங்கமான உமையா சிட்டி புரமோட்டர்ஸ் நிறுவனத்தில் நிலமாகவும் ,விருதுநகரில் உள்ள ஆருசா நகை மாளிகையில் செய்கூலி, சேதாரம் இன்றி நகையாகவும் ,அமுதசுரபி சிட்பண்டில் பணமாகவும் திருப்பித் தருவதாக கூறினார்.

இதை நம்பியவர்கள் விருதுநகர் கிளை ஆருசா நகைக்கடையில் மாதத்தவனை செலுத்தி வந்த நிலையில் ஜனவரி 9-ம் தேதி . நிறுவனம் மூடப்பட்டது. இதை அடுத்து அதில் முதலீடு செய்த அருப்புக்கோட்டை வாழவந்தான், ஜெகதீசன் உள்ளிட்டோர் பியூச்சர் ஜெனரேஷன் கேப்பிட்டல் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ஏமாற்றியதாக ஜனவரி 13 -ல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்தனர்.

இந்நிலையில் சம்பவத்தன்று நகைக்கடையை திறந்து அதிலிருந்து தளவாடப் பொருள்களை காலி செய்வதாக தகவல் அறிந்த புகார் அளித்தவர்கள் அங்கு கூடினர் பொருட்களை காலி செய்ய விடாமல் தடுத்தனர். பின்னர் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தியதை தொடர்ந்து பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

# ராமநாதபுரம் உள்ளிட்ட 4 மாவட்டங்கள் மிளகாய் வேளாண் மண்டலமாக அரசு அறிவிப்பு: கமுதி விவசாயிகள் வரவேற்பு

**கமுதி, மார்ச் 24-**

ராமநாதபுரம் மாவட்டம் உள்ளபட நான்கு மாவட்டங்களை மிளகாய் வேளாண் மண்டலமாக தமிழக அரசின் அறிவிப்பை கமுதி விவசாயிகள் வரவேற்றுள்ளனர்.



தமிழக அரசு வேளாண்மை பட்ஜெட்டில் ராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி உள்ளிட்ட 4 மாவட்டங்களை மிளாகாய் வேளாண் மண்டமாக அறிவித்துள்ளது. இதற்கு கமுதி பகுதியில் விவசாயிகள் வரவேற்று தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.இதுகுறித்து கமுதி அருகிலுள்ள கோரைப்பள்ளம் கிராமத்தை சேர்ந்த இயற்கை விவசாயி ராமர் கூறியதாவது தமிழக அரசின் வேளாண்மை பட்ஜெட் அறிவிப்பு விவசாயிகளுக்கு மகிழ்ச்சியளித்துள்ளது.

எங்களை போன்ற விவசாயிகளின் நலன் கருதி கமுதி பகுதியில் மிளகாய் கொள்முதல் குடோன் வசதி ஏற்படுத்தி தர வேண்டும். விவசாயிகளிடம் நேரடியாக மிளகாயை கொள்முதல் விலை அதிகரித்து விவசாயிகளின் வாழ்வாதராத்தை மேம்படுத்த தமிழக அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார்.

காவிரி-வைகை -குண்டாறு- கிருதுமால் நதிகளை இணைக்க வேண்டும் என விவசயிகள் கூட்டமைப்பு மாவட்ட செயலாளர் மு.மலைச்சாமி கூறியதாவது, .ராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட விவசாயிகளின் 70 ஆண்டு கால கனவுத் திட்டமான காவிரி -வைகை -கிருதுமால்-குண்டாறு உபரி நீர் இணைப்பு கால்வாய் திட்டத்திற்கு பொது பட்ஜெட்டிலும் அறிவிப்பு இல்லை. விவசாயிகள் பட்ஜெட்டிலும் அறிவிப்பு இல்லை.

இது ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு மிகுந்த ஏமாற்றம் என்று கூறினார். விவசாயி முருகேசன் கூறுகையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக பயிர்காப்பீடு தொகையும் வழங்கப்படவில்லை, இந்த வருடம் விவசாயம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வறட்சி நிவாரணம் இதுவரை வழங்காமல் இருப்பது வேதனை அளிக்கிறது என கூறினார்.

# அல்டிமேட் டேஸ்ட அணிவரிசையின் கீழ் ரெப்ரிஜ்ரேட்டர்களை அறிமுகம் செய்யும் எலக்ட்ரோலக்ஸ்

**சென்னை, மார்ச் 24-**

100 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பான வாழ்க்கையை வடிவமைக்கும் ஒரு முன்னணி அப்ளையன்ஸ் பிராண்டான எலக்ட்ரோலக்ஸ் குழுமம், இந்திய சந்தையில் அதன் தயாரிப்பு தொகுப்பை விரிவாக்கும் வகையில் அல்டிமேட் டேஸ்ட் என்ற பெயரின் கீழ் ரெஃப்ரிஜ்ரேட்டர்களின் அறிமுகத்தை அறிவித்திருக்கிறது. வெளிப்புற வடிவமைப்பிலிருந்து கதவு கைப்பிடி செயல்பாடுகள் மற்றும் விவேகமான உட்புற அமைப்பு வரை நுகர்வோரை நிறைவாக ஈர்க்கும்படி எலெக்ட்ரோலக்ஸ் ரெஃப்ரிஜ்ரேட்டர்கள் உருவாக்கப்படுகின்றன. எலக்ட்ரோலக்ஸின் ஸ்காண்டிநேவிய வடிவமைப்பு, சமையலறையின் அழகியல் அம்சத்தை இன்னும் நேர்த்தியாக உயர்த்துகிறது. பல்வேறு பளபளப்பு மேட் ஃபினிஷ் மற்றும் கருப்பு நிறத்திலான அல்லது இயற்கையான துருப்பிடிக்காத-ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஃபினிஷ்களில் இவைகள் கிடைக்கின்றன. டாப் ஃப்ரீஸர் ரெஃப்ரிஜ்ரேட்டர்ஸ், பாட்டம் ஃப்ரீஸர் ரெஃப்ரிஜ்ரேட்டர்ஸ், ஃபிரஞ்சு டோர் ரெஃப்ரிஜ்ரேட்டர் மற்றும் சைடு பை சைடு ரெஃப்ரிஜ்ரேட்டர் என நான்கு வேறுபட்ட வகைகளை உள்ளடக்கியதாக இது வெளிவருகிறது.

எலெக்ரோலக்ஸ் குழுமத்தின் வர்த்தக இயக்குநர் சுதிர் பாட்டீல் கூறுகையில், கோடை காலம் தொடங்குவதற்கு முன்னதாக "ஸ்வீடிஷ் சிந்தனை, மிகச்சிறந்த வாழ்க்கை" என்ற எமது கோட்பாட்டிற்கு இணங்க வடிவமைக்கப்பட்ட எமது 2023 ரெஃப்ரிஜ்ரேட்டர் அணிவரிசையை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். எலக்ட்ரோலக்ஸில் விரிவான சிறப்பு அம்சங்களின் தொகுப்பு, சமையலறை அலங்காரத்திற்கு அழகு சேர்க்கும் ஐரோப்பிய தரத்திற்கு நிகரான அழகிய வெளிப்புற வடிவமைப்பு மற்றும் நிலைப்புத்தன்மையுள்ள உணவுண்ணும் பழக்கத்தை ஊக்குவிக்கும் அம்சங்கள் ஆகியவற்றின் காரணமாக ரெஃப்ரிஜ்ரேட்டரின் சேமிக்கும் உணவுகள் நீண்ட காலம் பயன்படுத்தக்கூடியவாறு நிலைப்புத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

# திருமங்கலம் அருகே வீட்டில் தனியாக இருந்த ராணுவ வீரரின் மனைவியை தாக்கி 45 பவுன் நகைகள் கொள்ளை

**திருமங்கலம். மார்ச்.24.**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே வீட்டில் தனியாக இருந்த ராணுவ வீரரின் மனைவியை கைகளை கட்டி போட்டு 45 பவுன் நகைகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மதுரை மாவட்டம் கள்ளிக்குடி தாலுகா குராயூரை சேர்ந்த குருசாமி என்பவர் மகன் அய்யனார்(32). இவரது மனைவி கௌசல்யா(28). இருவருக்கும் திருமணமாகி இரண்டு மகன்கள் உள்ளனர். ராணுவ வீரரான அய்யனார் காஷ்மீரில் பணியாற்றி வருகிறார்.இதனால் கௌசல்யா தனது குழந்தைகளுடன் வீட்டில் தனியாக வசித்து வருகிறார். இதனிடையே அய்யனாரின் தாய்,தந்தை தோட்ட வேலைக்கு சென்று விட்டனர்.கௌசல்யாவின் குழந்தைகள் பள்ளிக்கு சென்று விட்டனர்.

இதனால் வீட்டை பூட்டி கௌசல்யா மட்டும் தனியாக இருந்துள்ளார்.இந்நிலையில் நேற்று மாலை வீட்டிற்கு வந்த இரண்டு நபர்கள் கௌசல்யாவின் வீட்டு கதவைத் தட்டி உனது மாமனார்,மாமியாருக்கு உடல் நிலை சரியில்லை வெளியே வாருங்கள் என அழைத்துள்ளனர். அப்போது வெளியே வந்த கௌசல்யாவை அவர்கள் வீட்டுக்குள் இழுத்துச் சென்று சரமாரியாக தாக்கியுள்ளனர். பின்னர் அவரிடமிருந்து 5 பவுன் நகைகளை பறித்து விட்டு கத்தியால் கௌசல்யாவின் கழுத்தில் கிழித்து காயப்படுத்தினர்.

மேலும் பீரோவில் இருந்த 40 பவுன் என 45 பவுன் நகைகளையும் எடுத்துக்கொண்டு கௌசல்யாவை வீட்டுக்குள் தள்ளி விட்டு அங்கிருந்து மர்ம நபர்கள் தப்பி ஓடி விட்டனர். இந்த சம்பவம் குறித்து கள்ளிக்குடி காவல் நிலையத்திற்கு தகவல் அளிக்கப்பட்டது. அதன் பேரில் விரைந்து வந்த போலீசார் கௌசல்யா விடம் நடந்த சம்பவங்கள் குறித்து கேட்டறிந்து விசாரணை மேற்கொண்டனர்.

மேலும் சம்பவம் நடந்த வீட்டிற்கு கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்ன தொடர்ந்து 45 பவுன் நகைகளை கொள்ளையடித்துச் சென்ற கொள்ளையர்கள் தேடும்பணியில் கள்ளிக்குடி போலீசார் தீவிர மாக ஈடுபட்டு அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமராக்களில் பதிவான காட்சிகளை போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.

வீட்டில் தனியாக ராணுவ வீரரின் மனைவியை தாக்கி 45 பவுன் தங்க நகைகளை மர்ம நபர்கள் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் சம்பவம் அப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# வார இறுதி நாட்களில் திருமங்கலம்-சென்னை இடையே சிறப்பு பேருந்துகள் இயக்கிட பொதுமக்கள் கோரிக்கை

**திருமங்கலம். மார்ச்.24.**

வார இறுதி நாட்களில் மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரிலிருந்து சென்னைக்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சிறப்பு பேருந்துகளை இயக்கிட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



மதுரை மாவட்டத்தில் வளர்ந்து வரும் நகரங்களில் முதன்மையானதாக திருமங்கலம் நகரம் திகழ்ந்து வருகிறது.நாள்தோறும் இங்கிருந்து சென்னைக்கு பல்வேறு காரணங்களுக்காக ஏராளமானோர் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். திருமங்கலத்திலிருந்து சென்னைக்கு சென்றிட இரவில் அனந்தபுரி,முத்துநகர் எக்ஸ்பிரஸ் ரயில்கள் மட்டுமே உதவுகின்றன.

ஆனால் அதிக கூட்டம் காரணமாக முன்பதிவு மற்றும் முன்பதிவற்ற பயணங்கள் திருமங்கலம் பகுதி மக்களுக்கு உதவாமல் போய்விடுகிறது.இதே போல் அதிக கட்டணம் வசூலித்திடும் ஆம்னி பேருந்துகளும் ஏழை எளிய மக்களுக்கு எட்டாக்கனியாக மாறிவிடுகிறது.மேலும் பெயரளவில் சென்னைக்கு இயக்கப்படும் அரசு விரைவு பேருந்தும் முன்பதிவால் நிரம்பிவிடுவதால் பயனின்றி போய்விடுகிறது.இதனால் சென்னை சென்றிடும் திருமங்கலம் பகுதி மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலே தங்களது பயணத்தை சிரமத்துடன் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த 10ஆண்டுகளுக்கு முன்பு திருமங்கலம் நகரிலிருந்து சென்னைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சொகுசு பேருந்து இயக்கப்பட்டது.ஒரே சமயத்தில் இருமார்க்கத்தில் இயக்கப்பட்ட இந்த பேருந்துகளுக்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்ததுடன் வசூலையும் வாரிக்குவித்து வந்தது.இருப்பினும் தொலை தூர பயணத்தை காரணம் காட்டி அந்த அரசுப் பேருந்து நிறுத்தப்பட்டு விட்டது.

அதற்குப் பின்னர் இன்று வரை சென்னை சென்றிட திருமங்கலம் நகரிலிருந்து நேரடி பேருந்து போக்குவரத்து கிடைத்த பாடில்லை.மதுரையிலிருந்து சென்னைக்கு வார இறுதியில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வரும் நிலையில் தமிழக அரசு மனது வைத்து திருமங்கலம் நகரிலிருந்து சென்னைக்கு நேரடிப் சொகுசுப் பேருந்து வசதி அல்லது வார இறுதி நாட்களில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் திருமங்கலம் கிளை சார்பில் சார்பில் சென்னைக்கு சிறப்பு பேருந்துகளை இயக்கிட வேண்டும் என்பதே திருமங்கலம் பகுதி மக்கள் எதிர்பார்ப்பாக உள்ளது.

# புதிய ஐக்.யூ.ஓ.ஓ. இசட் 7 ஸ்மார்ட்போன் ஆன்லைனில் விற்பனை துவங்கியது

**சென்னை, மார்ச் 24-**

புரட்சிகர ஸ்மார்ட்போன்களை அறிமுகப்படுத்தி விற்பனை செய்து வரும் ஐக்.யூ.ஓ.ஓ. நிறுவனம் அதன் இசட் வரிசையில் புதிதாக முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய ஐக்.யூ.ஓ.ஓ. இசட்7 5 ஜி ஸ்மார்ட்போனை அமேசான்.இன் மற்றும் ஐக்யூஓஓ இ-ஸ்டோரில் அறிமுகம் செய்துள்ளது. இந்த ஐக்.யூ.ஓ.ஓ. இசட்7 5 ஜி ஸ்மார்ட்போன் மீடியாடெக் டைமன்சிட்டி 920 5ஜி புராசசர் மூலம் செயல்படுகிறது, இது இந்த விலைப் பிரிவில் உள்ள மற்ற புராசசர்களுடன் ஒப்பிடுகையில் சிறந்த செயல்திறனை வழங்குகிறது. மேலும் கூடுதலாக, இந்த ஸ்மார்ட்போனில் இந்தியாவின் முதல் 64 எம்.பி. ஓ.ஐ.எஸ். அல்ட்ரா-ஸ்டேபிள் கேமரா, 44 வாட்ஸ் பிளாஷ் சார்ஜ், அல்ட்ரா கேம் மோடு, கைரேகை ஸ்கேனர் மற்றும் 1300 நிட்ஸ் ஸ்கிரீன் உள்ளிட்ட விதிவிலக்கான சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது.

மேலும் கூடுதலாக, இதற்கு இந்நிறுவனம் 3 வருட மாதாந்திர பாதுகாப்பு புதுப்பிப்புகளையும், இரண்டு வருட ஆண்ட்ராய்டு புதுப்பிப்புகளையும் வழங்குகிறது. மேலும் இந்த போனில் பன்டச் ஓஎஸ்13 இயங்குதளம் உள்ளது. அறிமுக சலுகையாக 6 ஜி.பி.ரேம் மற்றும் 128 ஜி.பி. மெமரி கார்டுடன் 17,499 ரூபாய்க்கும் 8ஜிபி ரேம் மற்றும் 128ஜிபி மெமரி கார்டுடன் 18,499 ரூபாய்க்கும் நார்வே ப்ளூ மற்றும் பசிபிக் நைட் ஆகிய வண்ணங்களில் அமேசான்.இன் மற்றும் ஐக்.யூ.ஓ.ஓ. இ-ஸ்டோரில் கிடைக்கிறது.

# குறைந்தபட்ச ஆதார விலையில் கொப்பரை தேங்காய் கொள்முதல்
## ராமநாதபுரம் கலெக்டர் தகவல்

**ராமநாதபுரம், மார்ச். 24-**

ராமநாதபுரம் கலெக்டர் ஜானிடாம் வர்கீஸ் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-



தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு நல்ல விலை பெறுவதற்கும் தமிழ்நாடு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. விளைபொருளின் விலை குறைந்தபட்ச ஆதார விலைக்கு கீழ் செல்லும் போது, ஆதார விலை திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச ஆதார விலையில் விளைபொருட்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் நேரடி கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு லாபகரமான விலை கிடைத்திட தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

தற்போது தென்னை விவசாயிகளுக்கு உதவும் வகையில், விலை ஆதரவு திட்டத்தில் குறைந்தபட்ச ஆதார விலையில் தேங்காய் கொப்பரை கொள்முதல் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. விலை ஏற்ற இறக்கத்தில் இருந்து விவசாயிகளை பாதுகாத்து, விவசாயிகளின் விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைத்திடும் பொருட்டு விவசாயிகளிடமிருந்து தேங்காய் கொப்பரை எளிதில் கொள்முதல் செய்வதற்காக தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம் ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமநாதபுரம் ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் 75 மெட்ரிக் டன் அரவைக் கொப்பரை ஆதார விலைத் திட்டத்தில் கொள்முதல் செய்திட அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசினால் 2023-ம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலையான கொப்பரைக்கு கிலோ ரூ.108.60 என்ற விலையில் ராமநாதபுரம் ஒழுங்குமுறை அரவைக் விற்பனை கூடத்தில் ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை கொள்முதல் செய்யப்படும். ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு எதிரே உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் விற்பனைக்கூட பொறுப்பாளரை அணுகி தங்களது பெயர்களை பதிவு செய்திடலாம். பெயர்களை பதிவு செய்யும் போது, நிலச் சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை, மற்றும் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் ஆகியவற்றின் நகல்களை சமர்ப்பிக்க வேண்டும்.

மத்திய அரசின் கொள்முதல் நிறுவனமான நாபெட் நிறுவனம் பரிந்துரைக்கும் குறைந்தபட்ச தரத்தில் விளைபொருள் இருத்தல் அவசியமாகும். விவசாயிகள் தரத்தினை உறுதி செய்து குறைந்தபட்ச ஆதார விலை பெற்றிடலாம். தமிழகத்தில் கொப்பரை கொள்முதலுக்கு தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் மாநில முகமையாக செயல்படுகிறது. கொள்முதல் செய்யப்படும் தேங்காய் கொப்பரைக்கான தொகையினை விரைவில் அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்திட அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு மேற் கொண் டுள் ளது. சேமிப்பு கிடங்குகளில் கொப்பரை குவியல்கள் சேர்க்கப்பட்ட நாளிலிருந்து 3 நாட்களுக்குள் அதற்குரிய தொகை வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தேனியில் எல்.எஸ் மில்ஸ் சார்பில் மாவட்ட அளவிலான கூடைப்பந்து போட்டி இன்று துவக்கம்

**தேனி மார்ச் 24**

தேனி மாவட்டம் தேனியில் எல்.எஸ் மில்ஸ் நடத்தும் மாவட்ட அளவிலான கூடைப்பந்தாட்ட போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

மூன்று நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் தேனி, பெரியகுளம், வடுகபட்டி போடி, கம்பம் உள்ளிட்ட 15 அணிகள் பங்கு பெறுகின்றன. போட்டிகள் மின்னொளியில் நடைபெறுகிறது.

போட்டிகள் நாக்-அவுட் மற்றும் லீக் முறையில் நடைபெறுகிறது. இப்போட்டியில் முதலிடத்தை பிடிக்கும் அணிக்கு 20 ஆயிரமும், இரண்டாம் இடம்பிடிக்கும் அணிக்கு 15 ஆயிரமும், மூன்றாம் இடம் பிடிக்கும் அணிக்கு 10 ஆயிரமும், 4ம் இடம் பிடிக்கும் அணிக்கு 5 ஆயிரமும் பரிசுத்தொகை வழங்கப்பட உள்ளது. போட்டிகளுக்கான ஏற்பாடுகளை எல்.எஸ்.மில்ஸ் கூடைப்பந்தாட்ட கழகம் சிறப்பாக செய்து வருகின்றனர்.

**மரம் மனிதனின் உரம்**

